தினமலர் 06/08/2019

# 'கேட்' நுழைவு தேர்வில் 'பயோ மெடிக்கல்' தாள்

சென்னை, ஆக. 6–

'முதுநிலை படிப்புக்கான நுழைவு தேர்வில், 'பயோ மெடிக்கல்' இன்ஜினியரிங் பாடத்திற்கான தாள், புதிதாக இணைக்கப்படும்' என, சென்னை ஐ.ஐ.டி., அறிவித்துள்ளது.

பி.இ., மற்றும், பி.டெக்., முடித்தவர்கள், முதுநிலை இன்ஜினியரிங் படிப்பில் சேர, தேசிய அளவில் நடத்தப்படும், 'கேட்' நுழைவு தேர்வில், தேர்ச்சி பெற வேண்டும். அதுபோல, உயர்கல்வி தொழில்நுட்ப நிறுவனங்களான, ஐ.ஐ.டி., மற்றும், என்.ஐ.டி., ஆகியவற்றில் சேர, இந்த தேர்வில், பட்டதாரிகள் தேர்ச்சி பெற வேண்டும்.

அண்ணா பல்கலையுடன் இணைந்த இன்ஜினியரிங் கல்லூரிகளில், முதுநிலை படிப்பில் சேர, கேட் தேர்வு அல்லது தமிழக அரசின், 'டான்செட்' நுழைவு தேர்வில், தேர்ச்சி பெற வேண்டும். பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் முடித்தவர்கள், உயர் படிப்பை மேற்கொள்ளும் அம்சங்கள், கேட் தேர்வில், இது வரை இடம் பெறாமல் இருந்தன.

இதை கருதி, ஐ.ஐ.டி.,க்களின் கவுன்சில் சார்பில், சென்னை ஐ.ஐ.டி.,யில், ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், மற்ற, ஐ.ஐ.டி.,க்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இதையடுத்து, கேட் நுழைவு தேர்வில், பயோமெடிக்கல் இன்ஜினியரிங் பாடத்துக்கு, புதிய தாளை இணைக்க முடிவு செய்யப்பட்டது.

இதன் வழியாக, மருத்துவ துறையில், இன்ஜினியரிங் வழியாக சாதிக்க நினைப்போருக்கு, உயர் கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக, சென்னை ஐ.ஐ.டி., அறிவித்துள்ளது.

தினமலர் 06/08/2019

# 'ஒரு மாணவர் – ஒரு மரம்' திட்டம் பல்கலை, கல்லூரிகளுக்கு உத்தரவு

திருப்பூர், ஆக. 6–

'ஒரு மாணவர் – ஒரு மரம்' திட்டத்தைச் செயல்படுத்த பல்கலை மற்றும் கல்லூரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

பல்கலை மானியக் குழு (யு.ஜி.சி.,) செயலர் ரஜ்னீஸ் ஜெயின், நாடு முழுவதும் உள்ள, பல்கலை துணைவேந்தர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் இயக்குனர்களுக்கு அனுப்பிய கடிதம்:

உயர் கல்வி நிறுவனங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். சுற்றுச்சூழல் காப்பதற்கும், மாசுக் கட்டுப்பாட்டைத் தடுப்பதற்கும், முடிந்த அளவு மரங்கள் நடுவதே சிறந்த வழி. 2015ல், 'ஒரு மாணவர் ஒரு மரம்' என்ற திட்டத்தை, பல்கலைகள், உயர் கல்வி நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுத்தின.

அதே முறையில், இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த, பல்கலைகள் மற்றும் கல்லூரிகள், மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

குறைந்தபட்சம் ஒரு மரத்தையாவது, அவர்கள் நட்டுப் பாதுகாக்க வேண்டும். தண்ணீர் சேமிக்கவும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

மத்திய மனித வளத்துறை அமைச்சர் ரமேஷ் போக்ரியால், மரம் நடுதல் மற்றும்தண்ணீர்வளம்பாதுகாத்தலை ஒரு இயக்கமாக மேற்கொள்ள வலியுறுத்தி வீடியோ வெளியிட்டுள்ளார். 'environment preservation77@gmail.com' என்ற இ மெயில் முகவரிக்கு, மரம் நடுதல் மற்றும் தண்ணீர் வளம் பாதுகாப்பு தொடர்பான போட்டோக்களை, பல்கலை மற்றும் கல்லூரிகள் அனுப்பலாம்.

இவ்வாறு, ரஜ்னீஷ் ஜெயின் கூறியுள்ளார்.